செய்த செய்கை, இந்த அவைக்கே மிகத் தலைக்குனிவாகும். பேரவைத் தலைவருடைய மேசையை இடித்து, நாசப்படுத்தியது மட்டுமல்லாமல், பல தஸ்தாவேஜுகளையும் மிதித்து, இன்றைக்கு சேதப்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, தரமற்ற இந்தச் செயலை செய்த தே.மு.தி.க. உறுப்பினர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மேற்கொண்டு, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அவை முன்னவர் அவர்கள் தீர்மானித்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

தே.மு.தி.க. உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்ற அக்கிரமத்தை, அராஜகத்தை அனைவரும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். அதுவும், குறிப்பாக அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இங்கே இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். திரு. வி.சி. சந்திரகுமார் அவர்களும், மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்களும் இணைந்து, நேரடியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையே தாக்குகின்ற வகையிலே, அவர்களுடைய இருக்கையை நோக்கி வந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைத் தாக்குவதுபோல வந்தார்கள். பேரவைத் தலைவரையே தாக்குவது மாதிரி வந்தார்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அதுவும் கொலை வெறித் தாக்குதல் நடத்துவதைப்போல, இங்கே அவருடைய மேசையைத் தள்ளிவிட்டு, காவலர்களையும் தாக்கி, அவர்கள் தலையிலே அணிந்திருக்கின்ற தொப்பியைப் பிடுங்கி எறிந்து, இங்கே இருக்கின்ற ஆவணங்கள், புத்தகங்கள், அவர்கள் கொண்டு வந்த பேப்பர்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தையும் வீசியெறிந்து இருப்பதை இங்கே கண்கூடாக பார்த்துக் கொண்டிருந்தோம். இவ்வளவு அராஜகம் செய்து, சபைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையிலே, சபை மரபுகளுக்கு மாறான அவர்களுடைய நடவடிக்கை இந்தச் சபையினுடைய மொத்த வரலாற்றிலே இல்லாத ஒன்றாக அமைந்துவிட்டது. பெருமைக்குரிய இந்தச்

2015 பிப்ரவரி 19] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

சபைக்கு மிகப் பெரிய களங்கத்தை ஏற்படுத்திவிட்டார்கள். அப்படிப்பட்ட பெருங்குற்றத்தைப் புரிந்திருக்கின்ற தே.மு.தி.க. உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான தீர்மானத்தை நான் இங்கே அனைவருடைய அனுமதியோடு முன்மொழிகின்றேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் அலுவல்கள் நடைபெறவிடாமல் இடைமறித்தும் பேரவையின் விதிகளுக்கு மாறாக அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி (2)-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்து அமளியில் ஈடுபட்ட தே.மு.தி.க. உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடர் முடிய பேரவைப் பணிகளினின்று தற்காலிக நீக்கம் செய்யவேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"அவர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தொடர் முடியும் வரை தற்காலிக நீக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல், அடுத்ததாக வரம்புமீறி பேரவைத் தலைவரையே தாக்குகின்ற அளவுக்கு நடந்து கொண்ட, காவலர்களையும் தாக்கிய, தே.மு.தி.க.வினுடைய சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் அவரோடு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும், திரு. சந்திரகுமார் அவர்களோடு சம்பந்தப்பட்ட அனைவரையும், மற்றவர்களையும் அடுத்த கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடப்போகிறேன். இந்தத் தீர்மானத்தை முடித்துவிட்டு நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன்.

[2015 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்துடன் இந்த உறுப்பினர்களின் நடவடிக்கை குறித்து அவை உரிமைக் குழுவிற்கும் அனுப்பி வைத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *(குறுக்கீடு) இதை நியாயப்படுத்துகிறீர்களா? தலைவரை அடிக்க வந்ததை நியாயப்படுத்திப் பேசப்போகிறீர்களா? (குறுக்கீடு) இருங்கள் பிறகு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விட்டுவிட்டு கேட்கிறேன். அவையினுடைய முடிவிற்கு தீர்மானத்தை விட்டுவிட்டுப் பேசலாம்.*

பேரவைத் தலைவரைத் தாக்க ஓடிவந்து என்னுடைய மேசையை விலக்கி, மிக மோசமாக வேண்டுமென்றே திட்டமிட்டு என்னைத் தாக்கும்விதமாக வந்து இவர்கள் செய்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது. அவைக் காவலர்களைத் தாக்கியது, மிகவும் கண்டிக்கத்தக்கது. அவையே இதற்கு சாட்சியாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை அவையினுடைய முடிவிற்கு விடுகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

5. தே.மு.தி.க. உறுப்பினர்கள் பேரவைப் பணிகளினின்று கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிக நீக்கம்— மறுபரிசீலனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் நடந்த சம்பவங்களைக் குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அந்தத் தீர்மானத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு, உங்களுடைய தீர்ப்பை*